**15.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயிலில் இன்று (15.02.2020) சென்ட்ரல் மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை இசை நிகழ்ச்சி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, இன்று (15.02.2020) சென்ட்ரல் மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் மாலை 05:00 மணி முதல் மாலை 07:00 மணி வரை “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை” கலைக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

இதைத் தவிர, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து நாளை 16.02.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இரண்டு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது:

1. சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் காலை 10:30 முதல் மதியம் 12:30 மணி வரை ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வி) இலவச பல தேர்வு கேள்வி அடிப்படையிலான போட்டித் தேர்வு நடைபெறுகிறது. இப்போட்டியில் 1500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
2. பாலா விகாஸ் நாடகம் - இது பாலா விகாஸின் மாணவர்களால் நிகழ்த்தப்படுகிறது. இந்த நாடகம், சமூக விழிப்புணர்வு மற்றும் ஒரு குடிமகனின் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்நிகழ்ச்சி வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து நாளை 16.02.2020 (ஞாயிற்றுக்கிழமை)

3. மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை - சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை”, இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.